# நிதி நிலை முடிவுகள்

இந்திய நிறுவனங்கள் நிதி நிலை முடிவுகளை வெளியிட்டு வருகின்றன. முன்னணி நிறுவனங்களின் வருவாய் மற்றும் லாப வளர்ச்சி பற்றிய புள்ளிவிவரங்கள் வருமாறு:-

## சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட்

சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் நிறுவனம், மூன்றாவது காலாண்டில் (அக்டோபர்-டிசம்பர்), ஒட்டு மொத்த அளவில் 12 சதவீத வளர்ச்சியுடன் ரூ.163 கோடி நிகர லாபம் ஈட்டி உள்ளது. சென்ற நிதி ஆண்டின் இதே காலாண்டில் அது ரூ.148 கோடியாக இருந்தது. இதே காலத்தில் இந்நிறுவனத்தின் மொத்த வருவாய் ரூ.1,184 கோடியாக உயர்ந்துள்ளது.

இந்நிறுவனம் தனிப்பட்ட முறையில் ரூ.163 கோடி நிகர லாபம் ஈட்டி உள்ளது. தனிப்பட்ட வருவாய் ரூ.1,176 கோடியாக அதிகரித்துள்ளது. இந்நிறுவனத்தின் இயக்குனர்கள் குழு பங்குதாரர்களுக்கு பங்கு ஒன்றிற்கு ரூ.3.50 டிவிடெண்டு அறிவித்துள்ளது.

## டாட்டா மெட்டாலிக்ஸ்

டாட்டா மெட்டாலிக்ஸ் நிறுவனம், அக்டோபர்-டிசம்பர் மாத காலத்தில் ரூ.20 கோடி நிகர லாபம் ஈட்டி உள்ளது. சென்ற நிதி ஆண்டின் இதே காலாண்டில் அது ரூ.26 கோடியாக இருந்தது. ஆக, நிகர லாபம் 26 சதவீதம் சரிந்துள்ளது. இதே காலத்தில் இந்நிறுவனத்தின் வருவாய் ரூ.318 கோடியாக அதிகரித்துள்ளது.

ஏப்ரல் முதல் டிசம்பர் வரையிலான ஒன்பது மாதங்களில் இந்நிறுவனத்தின் நிகர லாபம் ரூ.76 கோடியாக உயர்ந்துள்ளது. இதே காலத்தில் வருவாய் ரூ.995 கோடியாக குறைந்துள்ளது.

## ஐ.ஐ.எப்.எல்.

ஐ.ஐ.எப்.எல். ஹோல்டிங்ஸ் நிறுவனம், டிசம்பர் மாதத்துடன் நிறைவடைந்த காலாண்டில், ஒட்டுமொத்த அளவில் ரூ.179 கோடி நிகர லாபம் ஈட்டி உள்ளது. சென்ற நிதி ஆண்டின் இதே காலாண்டில் அது ரூ.127 கோடியாக இருந்தது. ஆக, நிகர லாபம் 41 சதவீதம் உயர்ந்துள்ளது.

இதே காலத்தில் இந்நிறுவனத்தின் ஒட்டுமொத்த வருவாய் 29 சதவீதம் உயர்ந்து ரூ.1,270 கோடியாக அதிகரித்துள்ளது. இந்நிறுவனத்தின் இயக்குனர்கள் குழு, பங்குதாரர்களுக்கு நடப்பு நிதி ஆண்டிற்கான இடைக்கால டிவிடெண்டாக பங்கு ஒன்றிற்கு ரூ.4.50 அறிவித்துள்ளது.

## டாட்டா கம்யூனிகேஷன்ஸ்

டாட்டா கம்யூனிகேஷன்ஸ் நிறுவனம், டிசம்பர் காலாண்டில் ரூ.1,413 கோடி நிகர லாபம் ஈட்டி உள்ளது. சென்ற நிதி ஆண்டின் இதே காலாண்டில் அது ரூ.111 கோடியாக இருந்தது. ஆக, நிகர லாபம் 12 மடங்கிற்கு மேல் அதிகரித்துள்ளது.